# பின்னணித் தகவல் ஆவணம்

Ontario

அட்டர்னி ஜெனரல்
அமைச்சகம்

20 பிப்ரவரி 2006

**மக்கள் சேவையை மேம்படுத்த மனித உரிமைகள் அமைப்பில் சீர்திருத்தங்கள்**

**ஒன்டாரியோவில் நவீனப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் அமைப்பு**

மெக்கின்டி அரசு 2006 வசந்த காலத்தில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது; இது நிறைவேறினால், ஒன்டாரியோவின் 40-ஆண்டுகால பழமையான மனித உரிமைகள் அமைப்பு, நவீன மனித உரிமைகள் பிரச்சினைகளை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் மாற்றம் பெறும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய மனித உரிமைகளுக்கான வடிவம், மேம்படுத்தப்பட்ட ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் (Human Rights Tribunal of Ontario) முன் நேரடியாக புகார்களைப் பதிவு செய்து தீர்த்துக்கொள்ள விரைவாகவும் மேலும் பயன்தரக்கூடியதுமான வழிகளைத் தருகிறது. இந்தப் புதிய வடிவம் ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தை (Ontario Human Rights Commission) மேலும் வலுப்படுத்தவும், மனித உரிமைப் பிரச்சினைகளில் கூடுதல் செயல்முனைப்பு காட்டவும் வழி செய்கிறது.

**ஒன்டாரியோவில் நடப்பில் உள்ள மனித உரிமைகள் அமைப்பு**

ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம் மற்றும் ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயம் ஆகியவற்றை உள்ளடக்கிய தற்போதைய மனித உரிமைகள் அமைப்பானது, கனடாவிலேயே முதல் மனித உரிமைச் சட்டமாக இந்த மாகாணம் 1962 இல் ஏற்றுக் கொண்டது முதல் நடப்பில் உள்ளது. இந்தச் சட்டம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொருவரையும் அவர்தம் பணியிடங்கள், குடியிருப்புகள், பொருட்கள், சேவைகள் மற்றும் வசதிகளில் பாகுபாடு மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது.

**ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம்**

இந்த ஆணையம், அட்டர்னி ஜெனரல் வாயிலாக சட்டமன்றத்துக்குப் பதிலளிக்கும் பொறுப்புடைய சுதந்திர அமைப்பாகும். இந்த ஆணையம் ஒன்டாரியோ மனித உரிமைகள் சட்டத்தை (Ontario Human Rights Code) நடைமுறைப்படுத்துகிறது; அதன் முக்கியப் பங்கு, புகார்களைப் பெறுவதும் அவற்றை விசாரணை செய்வதுமாகும். புகார்கள் விசாரிக்கப்பட்ட பின், வழக்கை ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் முன் கொண்டுசெல்லப்பட வேண்டுமா என ஆணையம் முடிவு செய்கிறது.

ஆணையத்தின் கொள்கைப் பணிகள், குறிப்பிடத்தக்க மனித உரிமைப் பிரச்சினைகளின்மீது ஆய்வு மற்றும் மேம்பாட்டு வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்காக ஆணையம் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது. இதன் அண்மை வெளியீடுகளில் இனவாதச் சுருக்கவுரை, வயதின் அடிப்படையில் பாகுபாடு, கட்டாய ஓய்வு ஆகியவை பற்றிய அறிக்கைகளும், குழும உணவகங்களில் அனுமதி தொடர்பான தணிக்கையும் அடங்கும்.

மெக்கின்டி அரசு, 2005 நவம்பரில் பார்பரா ஹில் அவர்களை ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமை ஆணையராக நியமித்தது.

**ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயம்**

இத்தீர்ப்பாயம் சுதந்திரமான, பகுதி-நீதித்துறை அமைப்பாகும்; பாகுபாடுகள் மற்றும் துன்புறுத்தல்கள் மீதான புகார்களை சட்டத்தின்படி விசாரித்து முடிவு செய்கிறது. ஆணையத்தால் பரிந்துரைக்கப்படம் புகார்களை மட்டுமே இது விசாரிக்க முடியும். புகார்களைப் பரிசீலித்து, அதன்மீது முடிவு செய்வது இதன் பொறுப்பாகும்.

மெக்கின்டி அரசு, 2005 ஏப்ரலில் மைக்கேல் கோத்தெய்ல் அவர்களை ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் தலைவராக நியமித்தது.

**உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய ஒன்டாரியோ மனித உரிமைகள் ஆணையம்**

உத்தேசிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களின்படி, ஆணையத்தின் பணியானது ஒன்டாரியோவில் அமைப்புரீதியான பாகுபாடுகளைக் நீக்குவதற்காக மக்கள் கல்வி, மேம்பாடு மற்றும் ஆதரவு, ஆய்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் செயல்முனைப்பு நடவடிக்கைகளின்பால் கவனம் செலுத்துவதாக அமையும். ஆணையத்திற்கு உள்ளேயே இனவாத எதிர்ப்பு செயலகம் ஒன்றும் உருவாக்கப்படும். ஒரு புகாரை தன் சார்பில் முத்தரப்பாயத்திடம் நேரடியாகப் பதிவு செய்ய, அல்லது பிற வழக்குகளில் தலையிடும் அதிகாரத்தையும் ஆணையம் கொண்டிருக்கும்.

**உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய ஒன்டாரியோ மனித உரிமைகள் தீர்ப்பாயம்**

புகார்களுக்காக புதிய நடைமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்; இதன்படி தீர்ப்பாயத்திடம் நேரடியாக புகார் பதிவு செய்யலாம். புதிய மனித உரிமைகள் சட்டமானது, தீர்ப்பாயம் தகராறுகளை நியாயமாகவும், விரைவாகவும், ஆற்றலுடனும் தீர்ப்பதற்கும், மனித உரிமை மீறல்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கும் ஏற்ப தனது செயல்பாடுகள்மற்றும் நடைமுறைகளை வகுப்பதற்கு உரிய அதிகாரங்கள் கொண்டதாக ஆக்கும். இந்தப் புதிய வடிவமானது, தீர்ப்பாயத்தின்முன் நிவாரணம் கோரி வரும் மக்களுக்கு ஆதரவும் உரிமைகளும் வழங்கும் வகையில் சட்ட மற்றும் ஆலோசனைச் சேவைகளை உருவாக்கும்.

- 30 -

தொடர்புகள்:
கிரெக் க்ரோன் (Greg Crone)
அமைச்சு அலுவலகம் (Minister's Office)
*(416) 326-1785*

பிரெண்டன் கிராலி (Brendan Crawley)
அட்டர்னி ஜெனரல் அமைச்சு
(Ministry of the Attorney General)
*(416) 326-2210*

www.attorneygeneral.jus.gov.on.ca

பொதுவான தொலைபேசி விசாரணைகள்: 416-326-2220 or 1-800-518-7901

பார்வைத்திறன் இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண்களை அழைத்து, இந்த ஆவணத்தின் உரையைக் கேட்கலாம்.

TTY: 416-326-4012

இந்த ஆவணம் 14 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படுகிறது
மொழியாக்க வடிவங்கள் இந்த இணையத்தில் கிடைக்கும்:
www.attorneygeneral.jus.gov.on.ca.